ஸ்ரீ ராமாநுஜன்—336

ஆசிரியர்:

மஹாமஹிமோபாத்யாய ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்

ஸம்புடம் 28 | நளஞ்ஞ வைகாசி மாதம் 10—6—76 | ஸஞ்சிகை 12

இருபத்தெட்டாவது பிராயப்பூர்த்தி

நமது ஸ்ரீராமாநுஜனுக்கு இவ்விதழோடு இருபத்தெட்டாவது பிராயம் பூர்த்தியடைகிறது. அடுத்த இதழில் (337ல்) இருபத்தொன்பதாவது பிராயம் தொடக்கமாகிறது. கீழ் 333ஆம் இதழில் அடுத்த பிங்களவத்ஸரத்தின் ப்ரபாவம் ப்ரஸ்தாவிக்கப்பட்டு மேல் இதழ்தோறும் பிங்கள வத்ஸரமங்களமாலிகையென்கிற மகுடத்தின் கீழ் எம்பெருமானுர் பெருமையைப் பற்றின கட்டுரைகள் பிரசுரம் செய்யப்பட்டு வருகின்றன. பிங்கள வருடத்தின் சித்திரைத் திங்கள் வெகு தூரத்தில் இல்லை, ஸமீபத்திலுள்ளதென்றே கொள்ளலாம். பிங்களவாண்டின் தொடக்கத்திலேயே ஸ்வாமியின் திருநக்ஷத்ரோத்ஸவம் ஆகிவிட்டாலும் அந்த ஸம்வத்ஸரம் பூர்த்தியாகக் கொண்டாட்டங்களை நடத்தலாகாதோ வென்று சிலர் வினவுகின்றார்கள். ஏன் நடத்தலாகாது? தாராளமாக நடத்தலாம். பிங்கள வருஷம் *சித்திரையில் செய்ய திருவாதிரை வரைக்கும் முக்கியமான காலமாகக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவ ஸார்வபௌமர்கள் தங்கள் தங்கள் ச்ரத்தாபக்திகளை விசேஷித்துக் காட்டவேணுமென்பது நமது வேண்டுகோள். ...

இன்று வைகாசித் திருவிசாகம்

10—7—76 ஆகிய இன்று ப்ரபந்நஜநகூடஸ்தரான நம்மாழ்வார் திருவவதரித்த நன்னாளாகும். மணவாள மாமுனிகள்

"ஏரார் வைகாசி விசாகத்தி னேற்றத்தைப்
பாரோரறியப் பகர்கின்றேன்—சீரார்ந்த
வேதந்தமிழ் செய்த மெய்யனெழில் குருகை
நாதனவதரித்த நாள்" —என்றருளிச் செய்துள்ளார்.

இவ்விடத்தில் முக்கியமானதோர் ஆராய்ச்சி. ஆழ்வார் வேதம் தமிழ் செய்தவர் என்றால் என்ன பொருள். வடமொழி வேதத்தை மொழிபெயர்த்தாரா? பாஷ்யவுரை, பொழிப்புரை, கருத்துரை என்னும்படியான உரைகளின் வகைகளில் எவ்விதமான வகையைச் சேர்ந்தது திவ்வியப்பிரபந்தம். *இஷே த்வோர்ஜே த்வா*..... இத்யாதியாக அந்தணர் ஓதிவருகின்ற வேகத்தைத் தமிழ் செய்கையாகத் தெரியவில்லையே! என்று பலர் சங்கிப்பதுண்டு. அவர்களுக்குச் சொல்லுகிறோம். வடமொழி வேதத்தை நன்கு ஓதினவர்களான ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான நம் பூர்வாசார்யர்கள் திருவாய்மொழியை த்ராவிடவேதம் என்றே வ்யபதேசித்துள்ளார்கள். நாலாயிரத்தையும் நிகமாகப் பெற்ற நாதமுனிகள் திருவாய்மொழிக்குத் தனியனிட்டருளும் போது *பக்தார்ருகர்...நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்* என்று பணித்தருளினர். *ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரேப்யோ நம உக்திமதீமஹே, யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்தி மங்கள ஸூக்ரதாம்* என்று போற்றப்பட்ட கூரத்தாழ்வான் வேதமாதுக்குத் தாலிகட்டினவர் என்று ப்ரஸித்திபெற்றவர். அத்தகைய பெருமை வாய்ந்த அவ்வாசிரியர் நம்மாழ்வாரைத் துதிக்கும்போது *வேதார்த்த ரத்நநிதி:* என்றருளிச் செய்தார். நாதமுனிகள் திருவாய்மொழியைக் கடலாக ரூபணம் செய்தார். கூரத்தாழ்வானோவென்னில் *ஜீயாத் பராங்குச பயோதி:* என்று நம்மாழ்வாரையே கடலாக ரூபணம் செய்தருளினர். இந்தக் கடலுக்கு விசேஷணமிட்டார் *வேதார்த்த ரத்நநிதி:* என்று. கடல் ரத்நாகர மென்று ப்ரஸித்தம்; ஆழ்வாராகிற கடல் எந்த ரத்நங்களுக்கு ஆகரம்? என்ன; **வேதார்த்த ரத்நநிதி:** என்றார். ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் வேதார்த்தங்கள் வெள்ளமிடுகின்றன வென்றதாயிற்று.

இதற்குமேல் சிலர் கேட்கக்கூடியதாவது—ஆசாரியர்கள் ஸாதித்திருப்பது வாஸ்தவமே; அதனை இல்லைசெய்கின்றோமல்லோம். ஆனால் இன்னின்ன வேத வாக்கியங்களின் பொருளை இன்னின்ன பாசுரங்களினால் ஆழ்வார் விளக்கியருளினர் என்று காட்டவேணுமென்று கேட்கிறோம்—என்று. இதற்குச் சொல்லுகிறோம்.

பகவத்கீதையில் *த்ரைகுண்ய விஷயா வேதா:* என்றோதப்பட்டது. ஸத்வ ரஜஸ்தமஸ்ஸுக்களாகிற முக்குணங்களுக்கும் வசப்பட்டவர்களுக்கு உபஜீவ்யங்கள் வேதங்கள் என்றது. மேலும் அந்த கீதையிலேயே *யாவாந் அர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே, தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:* என்றும் சொல்லிற்று. ஒரு பெரிய தடாகத்தில் தண்ணீர்மட்டுமில்லை; பாசிகள்

தவனைகள் மீன்கள் முதலியன மற்றும் பலபலவுமுள்ளன. வேண்டாதவற்றைத் தள்ளி வேண்டுமவற்றைக் கொள்ளா நின்றது உலகம். அதுபோல, குணத்ரயப்ரசுரர்களுக்கு உபஜீவ்யங்களான வேதங்களில் ஸாத்விகர்கள் உபஜீவிக்கும் அர்த்தவிசேஷங்கள் எவை யென்னில்; பகவச் சாஸ்த்ரங்கள் அவற்றை யெடுத்துக் கூறியுள்ளன. "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச் ச ப்ரத்யகாத்மந:, ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்தி விரோதி ச. வதந்தீதிகலா வேதா ஸேதிஹாஸபுராணகா:". இத்யாதிகள் நம் ஆசார்யர்கள் கையாண்ட வசனங்கள். ப்ராப்யனான எம்பெருமானைப் பற்றியும், ப்ராப்தாவான ஜீவாத்மாவைப் பற்றியும், பரம புருஷனை ஜீவாத்மா அடையத்தக்க உபாயத்தைப் பற்றியும், உபாயம் நிஷ்பன்னமாஞல் பெறக்கூடிய பேற்றை [புருஷார்த்தத்தை]ப் பற்றியும், விரோதிகளின் ஸ்வரூபத்தைப்பற்றியுமே சேதநர்கள் முக்கியமாகத் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டவர்கள். இந்த ஐந்து விஷயங்களும் ஐந்து நாட்களிலோ ஐந்து மாதங்களிலோ ஐந்து வருஷங்களிலோ தெரிந்துசொள்ளக் கூடியவையல்ல. இவற்றை ஸாங்கோபாங்கமாகத் தெரிவிக்கவே உபப்ருஹணங்களோடுகூடிய வேதங்கள் அவதரித்தன. வேத வேதாந்தங்கள் தெரிவிப்பதிற்காட்டிலும் ஆழ்வாரருளிச் செயல்கள் தெரிவிப்பதானது விலக்ஷணமாயும் ஸாரமாயுமிருக்கும்.

திருவாய்மொழிக்கு அவதரித்துள்ள தனியன்களுள்

"மிக்க இறைநிலையும் மெய்யாமுயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்"

என்கிற வெண்பா மிகவும் ஸாரமானது.

திருவாய்மொழி யாயிரத்தில் நூறுபதிகங்கள் உள்ளன; மேலேகுறித்த ஐந்து அர்த்தங்களில் ஒவ்வோர் அர்த்தத்திற்கு நான்கு பதிகங்கள் வீதம் இருபது பதிகங்களிலே ஐந்து அர்த்தங்களையும் வெகு விளக்கமாக வெளியிட்டு, அவற்றை மற்ற எண்பது பதிகங்களிலே விஸ்தரித்துரைப்பதாக நம் ஆசாரியர்களின் நிர்வாஹம்; "உயர் திண் அணை ஒன்று, பயில் ஏறு கண் கரு வீடு சொன்னால் ஒருக் கொண்ட, நோற்றநாலும், எம்மா வொழிவில் நெடு வேய் என்கிற இருபதிலே விசதமாக்கி எண்பதிலே பரப்புகையாலே..." என்கிற ஆசார்யஹ்ருதய சூர்ணையின் வியாக்கியானம் ஸேவித்துத் தெளிவது.

திருவாய் மொழியை வேதமாகச் சொல்லுவதுபோல, உபப்ருஹணமாகவும் சொல்லுவதுண்டு. "பாரத கீதைகளின் வேதோபநிஷத்தவம்போலே இதுவும் வ்யாக்யையாஞலும் வேதரஹஸ்யமாம்" என்பது ஆசார்யஹ்ருதய சூர்ணை. இதன் வியாக்கியானமும் ஆழ்ந்து ஸேவிக்கத்தக்கது. ... ...

திருவாய்மொழியில் சில வினாவிடைகள்

1. (வினா) திருவாய்மொழியாயிரத்தில் அந்யாபதேசப் பதிகங்கள் (அதாவது) மகள்பாசுரம் தாய்ப்பாசுரம் தோழிபாசுரம் என்னும்படியான பதிகங்கள் எத்தனை? (விடை) இருபத்தேழு. (அதற்கு விவரணம்.) மகள்பாசுரமான பதிகங்கள் பதினேழு தாய்ப்பாசுரமான பதிகங்கள் ஏழு. தோழி பாசுரமான பதிகங்கள் மூன்று. ஆக இருபத்தேழு திருவாய்மொழிகள் அந்யாபதேச முறையில் நிகழ்ந்தவை. மற்ற எழுபத்துமூன்றுபதிகங்கள் ஆழ்வார் தாமானதன்மையில் அருளிச் செய்தவை.

2. (வினா.) பாசுரங்களையருளிச் செய்பவர் ஆழ்வார்தாமே யாயிருக்க, மகள் பேச்சென்றும் தாய்ப்பேச்சென்றும் தோழிபேச்சென்றும் உருமாறிப் பேசுவது எதற்காக? (விடை) தாய்பேச்சாலே திடமான அத்யவஸாயத்தை வெளியிடுகிறபடி. மகள்பேச்சாலே *பேற்றுக்குத் த்வரிக்கையாகிற பதற்றத்தை வெளியிடுகிறபடி. தோழிபாசுரத்தாலே ஆகாரத்ரயத்தில் முக்கியமான அநந்யார்ஹ சேஷத்வத்தை வெளியிடுகிறபடி.

3. (வினா) இவற்றை ஆழ்வார் தமது திருவாக்காகவே வெளியிடலாகாதோ? அந்யாபதேசப்பாசுரமாகப் பேசுவானேன்? (விடை) அத்யவஸாயத்தின்னமையையும், பேற்றில் பதற்றத்தையும், அநந்யார்ஹத்வத்தையும் தமது திருவாக்காகவே பேசாமலில்லை; பலகால் பேசியேயிருக்கிறார். ஆனாலும் உருமாறிப்பேசுவதில் சுவை மிகுதியுள்ளதென்பதை அநுபவரஸிகர்களே அறியவல்லார். மேலும் மகள் தாய் தோழிபாவனைகளை ஆழ்வார்தாம் ஏறிட்டுக் கொள்ளுகிறாரல்லர் அந்த நிலைமைகள் தாமேவந்து புகுகின்றன ஆசார்யஹ்ருதயத்தில் "பெருக்காறு பலதலைத்துக் கடலைநோக்குமாபோலே" இத்யாதி சூர்ணையின் வியாக்கியானம் ஸேவிக்க வேணும்.

4 (வினா) ஆழ்வார் உபதேசம் செய்தருளுகிறரே, எத்தனை பதிகங்களில் அது செய்தருளுகிறார்? (விடை) திருவாய்மொழியாயிரமும் பததுப்பத்தாக வகுப்புண்டிருக்கின்றதன்றே; ஒவ்வொருபத்திலும் ஒவ்வொருபதிகம் உபதேசபரமாக அவதரித்துள்ளது. முதற்பத்தில் *வீடுமின் முற்றவும். இரண்டாம்பத்தில் *கிளரொளியிளமை. மூன்றும்பத்தில் *சொன்னால் விரோதம்.. இங்ஙனே காண்க.

5. (வினா) யார்யாருக்கு ஆழ்வார் உபதேசம் செய்தருளுகிறார்? (விடை) ஸகலசாஸ்த்ரங்களும் செய்கிற உபதேசம் அஜ்ஞானிகளுக்கு மட்டுமே; ஆழ்வாரோவென்னில், அஜ்ஞர்கள், ஜ்ஞானிகள், ஜ்ஞான விசேஷயுக்தர்கள், ஸர்வஜ்ஞன் என்று வாசிபாராமல் எல்லார்க்குமே உபதேசித்தருளுகிறார்.

6. (வினா) ஸர்வஜ்ஞனென்பது ஸர்வேச்வரனேத்தானே; *லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம்* என்னும்படி அவன் ஆசார்யகோஷ்டியில் தலைவனைநிற்க, அவனுக்குங்கூடவா உபதேசிக்கிறார்? சிஷ்யலக்ஷண ஸம்பன்னர்க்கன்றே உபதேசிக்கவேணும். ஸர்வேச்வரனுக்கு சிஷ்யலக்ஷண ஸம்பத்தியுண்டோ? (விடை) ஆசார்யஹ்ருதயத்தில் மூன்றும்ப்ரகரணத்தில் "இருத்துமெண்டானையப் பொய்கலவாது" என்னும் அற்புதமான சூர்ணையில் "அவனே உபதேசஸத்பாத்ரம்" என்று ஸாதிக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றி மீண்டும் விசதமாக விஜ்ஞாபிக்கிறேன்.

பகவத் ராமாநுஜ திவ்ய வைபவம்

(முன் தொடர்ச்சி)

சோழராஜனுடைய உபப்லவத்திற்கு அஞ்சி ஸ்வாமி மேல்நாட்டுக்கெழுந்தருளல்

ஆழ்வான் உடையவர்க்கு உசாத் துணையாயிருந்து தர்சந நிர்வாஹம் பண்ணியருளுகிற காலத்திலே, ராஜேந்த்ர சோழபுரத்தில் அரசாண்டுவந்த குலோத்துங்க சோழராஜன் துஷ்ட சைவஞ்கையாலே கள்ளப் பொய்ந் நூல்களே மெய்ந் நூலாகக்கொண்டு தானும் தன் புரோஹிதனுமாக நாட்டிலுள்ள வித்வான்களே யெல்லாந் திரட்டி "சிவாத் பாதரம் நாஸ்தி" என்று எழுத்திடச் சொல்லி நிர்ப்பந்திக்க, சிலர் அவனுக்கு அஞ்சியும் சிலர் பொருட்டும் பூமிக்குமாசைப்பட்டும் அப்படியே யெழுத்திட்டார்கள். அப்போது அவ்வரசனிடத்துச் சிறிது மேன்மை பெற்றிருந்த நாலூரான் என்னுமொரு வைஷ்ணவன் அவ்வரசனே நோக்கி எங்களி ராமாநுசன் எழுத்திட்டாலன்றே எழுத்திட்டதாவது; மற்றையோர் இட்டா லென்ன? இடாவிடிலென்ன? என்று கூற, அதுகேட்ட அரசனும் அப்போதே இராமாநுசனே யழைத்து வரும்படி ஆள்களே யனுப்ப அவர்களும் உடையவர் மடத்தேதறச் சென்றவளவிலே இந்த செய்தியை யுணர்ந்து ஆழ்வான் "ஸ்வாமி ராஜஸபைக்கு எழுந்தருள்வராகில் அவர்க்கு அங்கு ஏதாவது அபாயம் விளையக் கூடும்; உலகுக்கெல்லாம் உயிரான அவரைக் காட்டிக் கொடுக்கத் தகாது; நாமே அவருடைய கோலம் பூண்டு ஸபைக்குச் செல்வோம்; கெடுதல் ஏதாவது நேர்ந்தாலும் நம்மோடே போகட்டும் என்று கருதி, அப்போது எம்பெருமானார் நீராட்டத்திற் கெழுந்தருளியிருப்பதறிந்து அவருடைய காஷாயத்தையும் த்ரிதண்டத்தையும் தரித்துக்கொண்டு அந்த ராஜபுருஷர்களுடனே போகப் புறப்படும்போது பெரிய நம்பியும் சில முதலிகளும் தாமுங் கூடவருவதாகப் புறப்பட, அவர்களுடன் ஆழ்வான் ராஜ ஸபைக்கெழுந்தருளினர். பிறகு உடையவர் நீராட்டஞ் செய்தெழுந்தருளி த்ரிதண்ட காஷாயாதிகளைத் தேடின வளவிலே 'கூரத்தாழ்வான் தரித்துக்கொண்டு ராஜ புருஷர்களுடனே யெழுந்தருளினர்' என்று முதலியாண்டான் விண்ணப்பஞ்செய்ய, ஆகில் அவருடைய வெள்ளையைத் தாருங்கள் என்று ஆழ்வானுடைய திருப்பரிவட்டத்தை வாங்கித் தாம் சாத்திக்கொண்டு ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் என்ன தீங்கு நேருமோவென்று சிந்தித்துத் துவண்டிருக்க, இனி ஸ்வாமி இவ்விடத்திலெழுந்தருளியிருக்கை உசிதமன்று என்று அனேவரும் விஜ்ஞாபிக்க, உடையவரும் உடனே புறப்பட்டெழுந்தருளித் திருநாராயணபுரம் சேர்ந்தார்.

[எம்பெருமானார் காலத்திலேயே யெழுந்தருளியிருந்த ப்ராமாணிக சூடாமணியான கருடவாஹந பண்டிதர் செய்தருளின திவ்யஸூரி சரிதத்தில் பதினெட்டாம் ஸர்க்கத்திலும், எம்பெருமானார்க்கு அத்தாணிச் சேவகராயிருந்த வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்தின் தொண்ணூற்றைந்தாம் சுலோகத்திலும் இக்கதை விளக்கமாக வுரைக்கப்பட்டிருத்தலால் இதில் யார்க்கும் விப்ரதிபத்தி

யுண்டாகக் காரணமில்லை. உடையவர்க்குந் தெரியாமலே ஆழ்வான் ஸ்வாத்தி யாலே தரித்துண்ட காஷாயங்களைத் தரித்து ஸபைக் கெழுந்தருளினதாகவும், சோழ ராஜனிடத்தில் நின்றும் ஆட்கள் வந்தவுடனே எம்பெருமானார் ஆழ்வான் ஆண்டான முதலானார் பலருங் கூடிக் கலந்து யோசித்து உடையவர் வெள்ளை சாத்திகொண்டு வெளியேறிவிட வேண்டியதென்றுப் ஆழ்வான் யதிராஜ வேஷம் பூண்டு ஸபைக்கெழுந்தருள வேண்டியதென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டு அப்படி நடந்ததாகவும் — இங்ஙனே இரண்டுவகையாக நூல்களிற் காணப்படுவதுண்டு. இவ்விரண்டு வகையும் ஸம்பாவிதமே யாகையால் இவற்றில் விப்ரதிபத்திக் கிடமில்லையென்க

ராஜஸபையில் நடந்த செய்திகளும் பின்னடந்த செய்திகளும்

ஆழ்வானும் பெரியநம்பியும் சோழராஜன் ஸதஸ்ஸிலே யெழுந்தருளின பிறகு அங்கு விசேஷமாக சாஸ்த்ர விசாரங்கள் நடைபெற்று 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்ற ராஜ வாக்யத்தின்மீது இகழ்ந்துரைக்கப்பட, சோழன் கடுஞ்சினத் தனனுய் 'இவ்விருவருடைய கண்ணையும் கீண்டு விடுங்கள்' என்று சேவகர்கட்குக் கட்டளையிட, ஆழ்வான் சோழனைக்குறித்து 'நீ மஹாபாதகியாகையால் உன்னைப் பார்த்த கண்கள் எனக்கு ஆகாது' என்று சொல்லித் தாமே தமது திருவுகிர்களாலே கீறிக் கண்ணை வாங்கியெறிய, பின்பு ராஜஸேவகர்கள் பெரியநப்பிளையைப் பிடித்துக் கொண்டுபோய்ச் சோழன் சொற்படி செய்து ராஜத்வாரத்தில் நின்றும் புறப்பட விட ஆழ்வான் 'தர்சநத்துக்காக தர்சனம் கொடுக்கப் பெற்றோமே!' என்று மகிழ்ந் திருக்க, பெரியநப்பி வ்ருத்தராகையாலே அவ்வேதனை பொறுக்கமாட்டாமல் அங்கேயொரு கொல்லைத் தலைமாட்டிலே 'ஆழ்வான் மடியிலே திருமுடியும் தம் திருமகளான அத்துழாய் மடியிலே திருவடிகளும் ஏறத்துக் கண்வளர்ந்தருளி ஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக்கொண்டு அங்கே திருநாட்டுக் கெழுந்தரு ளினார். பின்பு ஸ்ரீ பராந்தகபுரமென்னும் அக்ரஹாரத்தில் நின்றும் வந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் பெரியநம்பியை அங்கே ஸம்ஸ்கரித்துத் திருப்பள்ளிப்படுத்து ஆழ்வானை எழுந்தருள்வித்துக் கொண்டுபோய்த் தங்கள் ஊரிலே யிருத்தித் திருக் கண்வேதனை தீருமாறு சிலகாலம் உபசரித்துப் பிறகு திருவரங்கம் பெரியகோயி லிலே கொண்டு சேர்த்தார்கள். தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்த எம்பெருமானாரைப் பிரிந்து அங்கே வாழகில்லாமல் கோயில் வாஸத்தை விட்டிட்டு த் திருமாலிருஞ்சோலையில் வாஸத்தை விரும்பிப் பயணகதியாகப் புறப்பட் டெழுந்தருளினார். வழிபிடையே எழுந்தருளும்போது தம்முடைய மனத்துயரங் கள் நினைவுக்கு வாராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதி களை நினைத்து நெஞ்சு கனிந்திருக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவம் அதிமாநுஷ ஸ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்ரங்களை யருளிச்செய்துகொண்டே திருமாலிருஞ்சோலைக் கெழுந்தருளி அங்கே பல வாண்டுகளெழுந்தருளி யிருந்து ஸுந்தரபாஹுஸ்தவமும் அருளிச்செய்தார். அவ்வளவிலே அந்த மஹாபாதகி யான சோழன் கழுத்திலே புண்ணுகிப் புழுத்து மாண்டானென்ற செய்தி கேள்விப் பட்டு ஆழ்வான் அழகர் ஸன்னிதியிலே விடைபெற்று மீண்டும் கோயிலேற வெழுந்தருளினார்.

எம்பெருமானார் மேல்நாடடில் நின்று கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானை உசாவுதல்

சோழனுடைய உபப்லவங்களுக்கு அஞ்சி மேல்நாட்டுக் செழுந்தருளியிருந்த எம்பெருமானார், கோயிலில் நின்றும் அங்குவந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவராலே— சோழராஜ ஸதஸ்ஸில் ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் நேர்ந்த ஆபத்தைக் கேள்விப்பட்டுச் சாலவும் திருவுள்ளம் நொந்து ஆழ்வானுகிலும் உயிர்வாழ்ந்திருக்கப்பெற்றோமே' என்று திருவுள்ளம் தேறி, அப்போது தம்மிடத்தில் கைங்கரியம் செய்துகொண்டிருந்த மாறெறன்றில்லா மாருதிச்சிறியாண்டானை 'மிகவும் விரைவாகக் கோயிலுக்குச்சென்று ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ள விசேஷங்களையும் அறிந்து வாரும்' என்று நியமித்தருள, அவரும் மிக விரைந்து கோயிலுக்கு வந்து சோழன் புழுத்து மாண்ட செய்தியுட்பட எல்லாவற்றையும் ஆழ்வான் ஸன்னிதியிலே அறிந்துகொண்டு மீண்டு திருநாராயணபுரம் போய் எம்பெருமானார் திருவடிகளிலே இவற்றை விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு அவர் பெருமகிழ்ச்சிகொண்டு உடனே அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக் செழுந்தருளி முதலிகளுடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருள, ஆழ்வானும் எதிரே எழுந்தருளி உடையவர் திருவடிவாரத்திலே வேரற்ற மரம்போலேவிழுந்து ஸேவித்துத் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை யெடுத்தணைத்துக்கொண்டு சோக வேகத்தாலே ஒரு வார்த்தையும் அருளிச் செய்யமாட்டாமல் உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து 'வாரீர் ஆழ்வான்! இத்தர்சனத்திற்கு த்ருஷ்டி பூதரான உமக்கு இப்படி கண்போவதே! இது என்னுடைய தீவினையின் பயனன்றே?' என்றிப்படி பலவாறுக அருளிச்செய்து ஆழ்வானைத் தேற்றி, முன்பு போலே திருவரங்கச் செல்வத்தை வளர்த்துக்கொண்டு வாழ்ந்து வந்தார்.

திருமலையப்பனுக்கு திருவாழி திருச்சங்கு அளித்தது

பண்டொரு காலத்தில் திருவேங்கடமுடையான் தன் பக்கல் பரமபக்த சிகாமணியாயிருந்த தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஒருகாரணார்த்தமாகத் தன் திருவாழி திருச்சங்குகளைத் தந்தருளி, இப்படி ஆச்ரித பக்ஷபாதத்தாலே தனது திவ்யாயுதங்களையும் தந்து உபகரிக்கும் ஔதார்யகுணம் உலகில் பரவுவதற்காகச் சிறிதுகாலம் ஸுதர்சந பாஞ்சஜந்ய சூந்யனாகவே இருந்திட்டான். அக்காலம் கலியின் கொடுமையால் வர்ணாச்ரம தர்மங்கள் குலைந்து தேவாலயங்களும் சீர்கெட்டுப் பாஷண்டிகள் தலையெடுக்கும் காலமாயிருந்தது. திருமலையில் அர்ச்சகர்களாயிருந்த வைகாநஸர்கள் எம்பெருமானுக்கு முறைப்படி உபசாரங்கள் பண்ணுமல் அச்ரத்தை காட்டியிருந்த காரணத்தினால் தேசாதிபதியான யாதவராஜனால் அடிக்கடி தண்டிக்கப்பட்டு அங்கு வாழகில்லாமல் வெளிநாடு சென்றனர்; வ்ருத்தர்களாயிருந்த அர்ச்சகர்கள் இங்ஙனம் ஒருவரொருவராக வெளியேற, ப்ரபக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களும் இங்கு இலராக, விரல் நுழைக்க இடம் தேடிக்கொண்டிருந்த சைவர்கள் இதுவே நல்ல சமயமென்று கொண்டு அந்த யாதவமன்னன் பக்கல்சென்று அவனுடைய ப்ரீதியைச் சிறிது சிறிதாக ஸம்பாதித்து ஒருநாள் அவனிடம் சொன்னார்கள்—திருமலையில் ஸ்வாமிபுஷ்கரிணியின் தென்கரையில்

திகழும் தேவன் முருகக் கடவுள்தான்; அவர்க்குக் குமாரசாமி யென்றும் பெயர் வழங்குவதுண்டாகையால் அந்த நாமைக தேசத்தையிட்டு ஸ்வாமி புஷ்கரிணி யென்று அத்தடாகம் வழங்கப்பெற்றது. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் கூற வந்த வாமந புராணப் பகுதியில் இரண்டாவது அத்யாயத்தில் ஸுப்ரஹ்மண்யன் வேங்கடமலையில் ஒரு குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்தானென்று சொல்லப்பட்டிருத்தலாலும் அப்பெருமான் முருகக்கடவுளே. அவர்க்கு அஸாதாரண ஆயுதங்களான பாசமும் அங்குசமும் தவநிலைக்கு உரியவை யல்லாமையால் தரிக்கபபடவில்லை. இன்னும் பல ஹேதுக்களாலும் அம்மலை சைவக்ஷேத்ரமேயாம். இப்போதுதான் சிறிது காலமாகச் சில வைஷ்ணவர்கள் கூடிப் புராணார்த்தங்களை மனம் போனபடி சொல்லி அப்பெருமான் விஷ்ணுவேயென்றுரைத்து ராஜாவை வசப்படுத்திக்கொண்டு சில வைஷ்ணவ விக்ரஹங்களையும் கோவிலில் ஸ்தாபித்து உத்ஸவங்களை நடத்தத் தொடங்கினர்கள். உண்மையில் இது சைவக்ஷேத்ரமாகையால் சைவ விதிப்படி இனி இக்கோவிற் காரியங்கள் நடைபெறுமாறு மஹாப்ரபு செங்கோல் செலுத்தவேணும்—என்றார்கள்.

இதைக்கேட்ட அவ்வரசன் இந்த சைவர்கள் சொல்லுவதெல்லாம் அநுபவ விருத்தமா யிருக்கின்றதே; ஆராயாமல் நாம் எதையும் ஸாஹஸமாகச் செய்து விடக்கூடாது; தக்கபடி ஆராய்ச்சி செய்யவேணும் என்றெண்ணி இருந்தான்- அக்காலத்தில் அங்கு நிபுணர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாருமில்லாமையால் ஸாமாந்யராயிருந்த சிலர் திருவரங்கம் பெரியகோயிலில் மிக்க சிஷ்யஸம்பத்துடனே எழுந்தருளியிருந்த எம்பெருமானார்க்கு இச்செய்தியை அறிவித்தனர். இச்செய்தியை யறிந்த உடையவர் கடுநடையாகத் திருப்பதிக் கெழுந்தருளி ஸம்சயாக்ராந்தனாயிருந்த அரசனை நோக்கி. சைவர்களால் உனது நெஞ்சில் உண்டாக்கப்பட்ட சங்காகளங்கத்தை நீக்கி உன்னைத் தெளிவிப்பதற்காகவே நெடுந்தூரத்தில் நின்றும் இங்கே வந்தோம்; உனக்குப் பரிபூர்ண த்ருப்தி உண்டாகும்படி யாம் தெளிவாகச் சொல்லவல்லோம்; கேளாய் கொற்றவனே!" என்று தொடங்கினவாறே அவ்வரசன், முன்பு கொக்கரித்த சைவர்களையும் வரவழைத்து யெரியஸபையாக்கி சைவ வைஷ்ணவர்களுக்கு வாதயுத்தம் நடக்குமாறு நியமித்துத் தான் தடஸ்தனாயிருக்க, வெகு காலம்வரை வாதப்போர் நடந்ததில் சைவர்களுடைய துர்வாதங்களை யெல்லாம் எம்பெருமானார் ப்ராமாணிகமாகக் கண்டித்து வெற்றி பெற்று விளங்கினர். [இந்த வாதப்ரதிவாதங்களின் விவரணம் திருவேங்கடநந்தாழ்வான் பணித்த ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸ மாலையில் அறுபத்தைந்து பக்கம் நிறையப் பெரிய வாக்யார்த்த ஸரணியில் குறிப்பிடப்பட்டுள்ளன; அங்கே கண்டு கொள்வது) எம்பெருமானுடைய அற்புதமான உபபாதநங்களைக்கேட்ட மன்னவன் கலக்கம்நீங்கி மிக்க தெளிவுபெற்று, திருவேங்கடமலை விஷ்ணுக்ஷேத்ரமேயென்றும் அங்குள்ள பெருமான் திருமாலே யென்றும் அறுதியிட்டு "இந்த ஸ்ரீராமாநுஜர் ஸாமாந்ய புருஷரல்லர். அவதார புருஷரேயாவர்; இவர் மனம்வைத்தால் அதிமாநுஷமான காரியங்களையும் செய்து ஸர்வஜனங்களுக்கும் திண்ணிய நம்பிக்கை யுண்டாகுப்படி செய்யவும் வல்லவர்; அங்ஙன்செய்ய இவரை வேண்டிக் கொள்வோம்" என்றெண்ணி, "ஸ்வாமிந் ! யோகீச்வரரே !! தேவரீர் நிரூபித்துக்

காட்டிய சாஸ்த்ரார்த்தங்களை கேட்டுப் பரமானந்தமடைந்தேன்; திருமாலே திருமலைக்கு இறைவர் என்று நன்கு துணிந்தேன்; ஸம்சயலேசமுமில்லாமல் சிக்கெனத் தெளிவுபெற்றேன்; ஆயினும் மஹாபுருஷராயும் அதிமாநுஷ சேஷ்டிதராயுமிரா நின்ற தேவரீர், பண்டிதரோடு பாமரரோடு வாசியற எல்லாரும் தெளியுமாறு ஸமாதாநாபாயம ஏதாவது செய்தருளக் கூடுமேல் நன்று'' என்று கைகூப்பி விண்ணப்பஞ்செய்ய, அதனைக்கேட்ட எம்பெருமானார் புராணப் பொருள்களைப் பலவாறாக எடுத்து உபந்யஸித்துக் காட்டினவளவிலும் இவ்வரசனுடைய மனம் பரிபூர்ண த்ருப்தியை அடையவில்லை போலும்; அதிமாநுஷமானதொரு கார்யம் செய்து காட்டவேணுமென்கிறான்; ஆயிடீ; இங்ஙனே செய்வோம்;—ப்ரஹ்மாண்ட புராணத்தில் பதிநேராவது அத்யாயத்தில் எம்பெருமான் தானே சோதிவாய் திறந்து ப்ரதிஜ்ஞை செய்தருளியிருக்கிறபடியே கலியுகத்தில் விமான மண்டபாதி களைப்போல் சங்கு சக்ரங்களையும் பக்தர்கள் செய்து ஸமர்ப்பித்தால் ஸ்வீகரித்தே தீரவேணுதலால், நாம் செய்து ஸமர்ப்பிக்கும் திவ்யாயுதங்களையும் எம்பெருமான் ஸ்வீகரிக்கக் கூடுமே; ப்ரார்த்தித்தாகிலும் ஸ்வீகரிக்கச் செய்திடுவோம்; இவ்வி யேல் மஹத்தான அநர்த்தம் நேரிடும்போலிருக்கிறதே! இவ்வரியசெயலிலைல்தான் அனைவரும் விச்வஸிக்கவேணும் என்று திருவுள்ளத்திற் சிந்தித்து அப்படியே செய்திடுவதென்று அறுதியிட்டு, மன்னவனை நோக்கி, ''நான் எம்பெருமானுக்கு அஸாதாரணசிஹ்நங்களான திருவாழி திருச்சங்குகளைச் செய்வித்துக்கொணர்ந்து பகவத் ஸந்நிதியில் வைத்திடுகிறேன்; இந்த சைவர்கள் தாமும் தங்கள் தெய்வத்துக் குரிய பாசம் அங்குசம் முதலிய ஆயுதங்களைச் செய்வித்துக்கொணர்ந்துவைத்திடுக; எந்த ஆயுதங்களை எம்பெருமான் எடுத்து அணிந்துகொள்கிறானே பார்ப்போம்'' எனறருளிச்செய்தார்.

இதைக்கேட்ட அரசன் மகிழ்ச்சிகொண்டு 'இப்படியாகில் இது சிறந்த உபாயமே; பிறகு ஒருவர்க்கும் ஆக்ஷேபம் இருக்க ப்ரஸக்தியில்லையன்றே; நல்லது; அப்படியே இருவகுப்பினரும் செய்யக்கடவது' என்று சொல்ல; உபயவாதிகளும் தங்கள் தங்கள் தெய்வத்தின் அஸாதாரண ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து ஒருநாள் அவ்வரசனுடனே திருமலைக்கு வந்து இரவில் திருவேங்கடமுடையானுடைய ஸந்நிதி கர்ப்பக்ருஹத்தினுள்ளே அவற்றை வைத்துவிட்டுக் கதவுகளைப் பூட்டி மன்னவன் கையால் அரக்கிலச்சினை செய்வித்துக் காலையளவும் கோவிலைச் சுற்றிக் காவலிருந்துகொண்டு தங்களுக்கே வெற்றியுண்டாகும்படி தங்கள் தங்கள் தெய்வத்தைச் சிந்தைசெய்து கொண்டிருந்தனர்.

எம்பெருமானார் தமது யோகமஹிமையினால் உள்ளேபுக்கு எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து ''பரமபுருஷ! முன்பு நீ வாயோலைசெய்து கெடுத்த ப்ரதிஜ்ஞையின்படியே உனது அஸாதாரண சிஹ்நங்களைப் பேணி அணிந்துகொண்டு அடியோங்களைக் காத்தருளவேணும்'' என்று ப்ரார்த்தித்து அப்படியே திருவாழி திருச்சங்குகளை அணிந்து கொள்வித்து க்ருதக்ருத்யராயினர். பிறகு பொழுது விடிந்தவாறே யாதவமன்னன் நித்யாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு உபயவாதிகளுடனும் ஸந்நிதிக்குச்சென்று திருக்காப்பு நீக்குவித்துப் பெருமாளை ஸேவிக்கு

மளவில் பாச அங்குசாதி ஆயுதங்களை அப்பால் தள்ளிவிட்டுத் திருவாழி திருச் சங்குகளை யணிந்துகொண்டு பரமபோக்யமாக ஸேவை ஸாதிக்கக்கண்டு மிகவும் ஆச்சர்யப்பட்டு எம்பெருமானுர் பக்கல் அளவுகடந்த ப்ரதிபத்தியை வஹித்து அவரையே சரணமடைந்து க்ருதார்த்தனுகி, குத்ஸிதவாதம் பண்ணிக் கொக்கரித்துக் கிடந்த ஸைவர்களையும் த்ருணீகரித்து ராஜ்யத்தில் நின்றும் துரத்திவிட்டு இனிது வாழ்ந்தான்.

எம்பெருமானுரும் சிறப்புடனே சிஷ்ய வர்க்கங்களுடன் தென்னரங்கம் சென்று சேர்ந்து "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணுரடே" என்கிறபடியே நித்ய விபூதிச் செல்வத்தையும் இங்கிருந்தே ஆண்டுகொண்டு "தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" என்றபடியே அருளிச்செயல்களைப் பல வகைகளாலும் வளர்த்துக்கொண்டு வாழ்ந்தருளா நின்ருர்.

நிகமனம்

எம்பெருமான் வைபவம் போலே எம்பெருமானுர் வைபவமும் பேசியும் எழுதியும் தலைக்கட்ட வொண்ணுதது, அன்பர்கள் அனுதினமும் அநுஸந்திக்கப் பாங்காக இது சுருக்கமாக வரைந்தபடி. ஸ்வாமி யருளிச்செய்த திவ்ய க்ரந்தங்கள் நவநிதிகள் போலவும் நவரத்னங்கள் போலவும் ஒன்பதாம்; ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணுகதிகத்யம் ஸ்ரீரங்ககத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம்—என்பவை.

ஸ்வாமியின் பெருமைகளில் ஸாரமானவற்றை யெடுத்தரைத்துத் திருவரங்கத்தமுதனுர் பணித்த இராமானுச நூற்றந்தாதி ப்ரபந்ந காயத்ரி யென்று அன்று தொட்டே ப்ரஸித்தி பெற்றிருப்பதனுல் அதை நாடோறும் அநுஸந்திப்பதே நமக்குற்றது. அந்த நூற்றந்தாதியை உரையுடன் அடுத்த இதழ் முதல் வெளியிடுவோம். ... ...

நல்லாசிரியரின் நல்லுபதேசம்

("திருடு, புளுகாதே")

"ஞானமனுட்டானமிவை நன்ருகவே யுடையனுனை குரு" என்னுப்படி ஞானமும் அனுட்டானமும் நிரம்பிய ஓர் ஆசிரியர் யாத்திரையடைவில் ஒரு நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அவருடைய பெருமையைக்கண்டு அந்நகரில் பலர் அவரையடி பணிந்து உபதேசங்கள் பெற்றுவந்தார்கள். அவ்வூரில், பொய் களவு சூது முதலான தீய குணங்கட்குக் கொள்கலமான வொருவனும் அவ்வாசிரியரிடத்தில் வருவதும் போவதுமாயிருந்தான். ஆசிரியர் அவனுடைய தீயகுணங்களையறியாதவராய் அவனிடத்தும் பேரன்புகொண்டிருந்தார். அதுகண்ட மற்ற சீடர்கள் ஆசிரியரிடம் ஏகாந்தத்தில் சென்று "அந்தப்பயல் தேவரீரை அணுகுவதற்குத் தகுதியுடையவனல்லன்; பொய்யும் களவுமே வடிவெடுத்த அவனை அணுக வொட்டாமல் செய்யவேணும்" என்று வேண்டிக்கொண்டனர். அதுகேட்ட ஆசிரியர்

"நீங்கள் அஞ்சவேண்டா; நான் உஷாரா யிருப்பேன்" என்று அவர்களுக்குச் சொல்லிவிட்டு, அத்தீயவனையும் திருத்திப் பணிகொள்ளவேணுமென்று இரக்கங்கொண்டு, மறுநாள் அவன் தம்மிடம் வந்தபோது அவனைத்தனியே இருத்தி, உனது வாழ்க்கை வரலாறுகளை எனக்கு உள்ளபடி நீ சொல்லவேணும்; எப்படி நீ ஜீவித்து வருகிறாய்?" என்று வினவினார். அதற்கு அவன் "எனக்குப் பிதுரார்ஜிதமான சொத்துக்கள் ஏராளமாகவுண்டு; வீட்டுவாசலையும் வட்டிவருமானங்களையுங் கொண்டு இனிது வாழ்ந்து வருகிறேன்" என்றான். இது பெரும் புளுகு ஒருவீடும் கிடையாது; வட்டிவருமானத்திற்கு மூலதனமும் கிடையாது. களவினாலேயே ஜீவித்துவருபவன். இதை அவனே ஒப்புக்கொள்ளும்படியாகச் செய்துவிட்டார் ஆசிரியர். பிறகு அவன் ஆசிரியர் திருவடிகளில் விழுந்து "என்னை எப்படியாவது நல்வழிப்படுத்தவேணும்; எனக்கு வீடுவாசல் கிடையாது; எவ்விதமான ஸொத்தும் கிடையாது; பொய் சூது களவுகளினால் தான் ஜீவனம் நடத்திவருகிறேன். கழிந்த காலம் தொலையட்டும். இனி சுவாமிகள் எனக்கு நல்வழி காட்டியே யாகவேணும்" என்று சொல்லிப் புலம்பிக்கொண்டே திருவடிகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

அவன்மீது இரக்கங்கொண்ட ஆசிரியர் சூத்திரம் போலே ஒருவார்த்தை சொன்னார்—"திருடு, புளுகாதே" என்றார். வேண்டியமட்டில் திருடு; பொய்மட்டும் சொல்லாதே; உயிர்போமளவானாலும் பொய்யான பேச்சு சிறிதும் பேசாதே—என்று சொல்லிப் போகவிட்டார்.

அவன் ஆலோசிக்கிறான்;—களவுசெய்வதற்கு அனுமதி கொடுக்கிறார் ஆசிரியர்; களவுசெய்து பிடியுண்டால் ஏதாதாபொய்சொல்லிதானே தப்பித்துக்கொள்ளவேணும்; உயிர்போமளவானாலும் பொய் சொல்லாதேயென்று கடுமையாகக் கட்டளையிட்டுவிட்டாரே ஆசிரியர். இன்னது செய்வதென்று புரியவில்லையே! களவுசெய்வதையும் விட்டுவிட்டால் நமக்கு ஜீவனம் நடக்கவழியில்லையே! என்று மிகவும் அலைபாய்ந்த மனத்தோடு தவிக்கிறான் ஓரிரவெல்லாம் ஆலோசித்துக் கடைசியாக ஒரு முடிவுக்குவந்தான். (அதாவது) உயிர்போனாலும் பொய்சொல்லுவதில்லையென்பதைத் திடமாகவே கொள்ளவேண்டியதுதான். அடிக்கடி களவுசெய்யவேண்டாதபடி ஒரேஒரு களவு பெருத்த களவாகச்செய்வோம். நம்ஆயுள்வரை ஜீவனத்துக்குப் போதும்படியான பொருள்களை ஒரேநாளில் களவுசெய்வோம். அதனால் எவ்வளவுகஷ்டங்கள் நேர்ந்தாலும் பொய்சொல்லுவதை நெஞ்சாலும் நினையோம்—என்று முடிவு செய்து கொண்டான்.

அந்த நகரத்தில் கோடீச்வரனான அரசனுண்டு; அவனது அரண்மனையில் எப்படியாவது புகுந்து கொள்ளையிடுவோம் என்று துணிந்து ஒருநாளிரவு நள்ளிருளில் புறப்பட்டான். ராஜபவனத்தை நோக்கியே பெரியதொரு வீதியில் செல்லாநின்றான். அரசர்களுக்குக் கறுப்புடுத்துச் சோதித்தல் என்பதொன்றுண்டே. (அதாவது) ஒருவர்க்கும் தெரியாதபடி (அரசன்) தன்னைக் கறுப்புத்துணியால் மறைத்துக் கொண்டு நகர சோதனைசெய்வது. அந்த முறையில் அரசன் ஒரு பக்கிரிமாதிரி திரிந்து கொண்டிருக்கிறான். அவன் இக்கள்ளனை நோக்கி "ஆரப்பா! நீ? எங்கிருந்து

வருகிறாய்? எங்கேபோகிறாய்?' என்று வினவினான். இவன் பொய்சொல்லுவதில்லை யென்கிற திடமான சங்கற்பமுடையவனுதலால் உள்ளபடியே விடைகூறினான்— 'நான் இவ்வூரில்தான் இருப்பவன்; இப்போது அரண்மனையில் களவுசெய்யப் புறப் பட்டுப் போகிறேன்' என்றான். இது கேட்ட அரசன் அவனை நோக்கி "அப்பா! நீ பைத்தியக்காரனு என்ன? களவு செய்யப்போகிறவன் சொல்லிக் கொண்டே போவது முண்டோ? அதிலும் அரண்மனையில்களவுசெய்யப் போவதாகச் சொல்லுகிறாய். உன்னைப் பைத்தியக் காரனுகவே எண்ணுகிறேன்; என்றான் (மாறு வேடம் பூண்ட அரசன்). அதற்கு அவன் பதில் கூறினான்—"பெரியவரே! நான் பைத்தியக்கார னல்ல; இவ்வூரில் ஒருபெரிய குரு இருக்கிறார். அவரிடம் நான் உபதேசம் கேட்டு வருகிறேன். நான் இளமை தொடங்கிப் பொய்யும் களவும் சூதுமே கொண் டிருந்தேன். பலகால் களவுசெய்து சிறைபுகுந்து மிருக்கிறேன். இப்போது குருவின் உபதேசத்தைத் திடமாகக் கைக்கொண்டிருக்கிறேன். "திருடு புளுகாதே" என்று அவர் உபதேசம் செய்திருக்கிறார். அரண்மனையில் இன்று மட்டும் பெரியதொரு களவு செய்துவிட்டு, நாளைமுதல் களவையும் விட்டுவிடப் போகிறேன். பொய் சொல்லுவதை அறவே விட்டொழித்தாயிற்று. அதனுல்தான் உங்களிடம் உண்மை யைச் சொல்லநேர்ந்தது. நான் பைத்தியக்காரனல்ல" என்று சொன்னான். மாறு வேட அரசனுக்கு இப்பேச்சுக்களில் முழுநம்பிக்கை யுண்டாய்விட்டது; எள்ளளவும் சந்தேகமுண்டாகவில்லை. இவன் இனிப் பொய்சொல்லவே மாட்டானென்றும் இவனைத் தன்னிடத்தில் ஆதரித்து வைத்துக்கொள்ளவேணுமென்றும் அரசனுக்குத் தோன்றிவிட்டது. மேற்செய்தி கேளுங்கள்.

அரசன் அந்தக் கள்ளனிடம் சொல்லுகிறான்—'அப்பா! நானும் ஒருகள்ளன் தான்; களவு செய்வார்க்குத் துணையிருந்தால் நல்லதல்லவா? என்னை நீ துணைவனுக வைத்துக் கொண்டால் உனக்குச் சில உளவுகள் சொல்லித் தருகிறேன்; களவில் நீ ஸம்பாதிப்பதில் பாதிபங்கு எனக்குக் கொடுத்து விடவேணும், சம்மதந்தானு?' என்றான். அதற்கு அவன் 'ஆகா அப்படியே செய்கிறேன்; சந்தேஹப்படவேண்டாம் உனக்குத் தெரிந்த உளவுகளைச் சொல்லித் தா' என்றான் ஸத்யவாதிகள்ளன். பிறகு அரசன் 'அரண்மனைக்குள் நான்போனதில்லை; ஆனலும் மாடிமேல் விலையுயர்ந்த ரத்னங்கள் ஏராளமாக இருப்பதாய்க் கேள்வி. உன்னுடைய ஸாமர்த்தியத்தினல் எவ்வளவு கொள்ளைகொள்ள முடியுமோ பார்; நான்கீழேயே ஒருபக்கமாய்க் கிடக் கிறேன்; நீ போய் வா, என்று சொல்லியனுப்பிவிட்டான்.

சிப்பாய்கள் அயர்ந்து தூங்குகிற ஸமயம்; ஸத்யவாதிகள்ளன் மேல்மாடியில் சென்று சேர்ந்து விட்டான்; அரசனது கைப்பெட்டி அகப்பட்டது. அதில் விலை மதிக்கமுடியாத மூன்று ரத்னங்கள் இருந்தன. மூன்றையும் எடுத்துக் கொண்டால் பங்கிடமுடியாதாதலால் ஒன்றைப் பெட்டியிலேயேவைத்திட்டு இரண்டுரத்னங்கள் மட்டும் எடுத்துக்கொள்வோமென்று நிச்சயித்து இரண்டையெடுத்துக் கொண்டு மெதுவாகக் கீழே இறங்கிவிட்டான். மாறுவேஷ அரசனைச்சந்தித்தான்; அவனிடம் உள்ளபடியே சங்கதிகளைச் சொல்லி, "இதோ ஒரு ரத்னம் பெற்றுக்கொள்; நீ விரும்பினபடியே உனக்குப் பாதி பங்கு கொடுத்து விட்டேன், போய்வருகிறேன்'

என்று சொல்லிப் புறப்பட்டான்; அரசன் அவனுடைய முழுவிலாசத்தையுங் கேட்டுக் கைநோட்டில் பதிந்து கொண்டு அவனை யனுப்பி விட்டுத் தான் பள்ளியறை புகுந்து பள்ளிகொண்டான். சிப்பாய்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டேயிருக்கிறார்கள். அப்போது மூன்றுமணி. ஐந்துமணியளவில் விழித்துக் கொண்டவர்கள் சில குறிப்புகளினால் சோப்ரவைசமானதாக ஊஹித்து அரசனிடம் வந்து வருத்தத்தோடு கூறினார்கள். அரசன் ''ப்ரைவேட் ஸெக்ரிடெரியிடம் தெரிவித்து கவனிக்கச்சொல்லுங்கள்'' என்று உத்தரவிட்டு நித்திரையிலேயே யிருந்தான். ப்ரைவேட்ஸெக்ரிடெரி முழுவதும் சோதித்ததில் இரண்டுரத்னங்கள் காணுமலிருப்பதையும் ஒருரத்னம் மட்டுமிருப்பதையுர்கண்டு சலவிகியால் துர்ப்புத்திகொண்டு அந்த ஒருரத்னத்தைத் தான்கவர்ந்து சொக்காயில் ஒளித்திட்டு, அரசனிடம் வந்து 'மஹாப்ரபோ! கைப்பெட்டியிலிருந்த மூன்று ரத்னங்கள்தான் சளவுபோயிருக்கிறது; மற்றதொன்றும் போகவில்லை'என்றான். அதுகேட்டஅரசன் 'மூன்றுமா போய்விட்டது? நன்றாகப் பார்த்தாயா?' என்றவினவ, அதற்கு ப்ரைவேட் ஸெக்ரிடெரி, ''நன்றாகப்பார்த்தேன். திருடவந்தவன் ஒன்றிரண்டை வைத்துப் போவானே? மூன்றையுந்தான் கொண்டுபோய்விட்டான்'' என்றான். உடனே அரசன் அவனை அங்கேயே உட்காரச்சொல்லிவிட்டு, சேவகனை அழைத்து ஸத்யவாதிகள்ளனுடைய விலாஸத்தைக் கூறி உடனே அவனை இங்கு அழைத்துவா என்று சொல்லியனுப்பினான். சேவகன் உடனே ஓடிச்சென்று உறங்கிக் கொண்டிருந்த அவனையெழுப்பி ''மஹாப்ரபு உன்னைக் கையோடு அழைத்துவாச் சொன்னார்'' என்று கூற, அது கேட்ட அவன்—நம்முடைய களவும் அரசனுக்குத் தெரிந்து விட்டாப்போலிருக்கிறது; இருக்கட்டும்; நாம் ஸத்யத்தைக் கைவிடக்கூடாது'' என்று உறுதிகொண்டு இரவில் திருடிக் கொணர்ந்து உள்ளே வைத்திருந்த ரத்னத்தை யெடுத்து மடியில் வைத்துக்கொண்டு அரசனிடம் சென்று நின்றான். உடனே அரசன் அவனை நோக்கி 'நேற்றிரவு என்ன நடந்தது? உள்ளபடி சொல்லு பார்ப்போம்' என்றான். அவன் ஒன்றையும் ஒளியாமல் உள்ளபடி சொல்லி, ''களவு செய்வதற்கு இங்கு வந்தேன்; மூன்று ரத்னங்களிருந்தன; எனக்குத் துணைபுரிந்த ஒரு பக்கிரிக்குப் பாதி பங்கு கொடுக்கவேண்டியிருந்தபடியால் மூன்றைப் பங்கிடமுடியாதென்று ஒன்றை வைத்திட்டு இரண்டைமட்டும் கவர்ந்து சென்று ஒன்றை அவனுக்குக் கொடுத்து விட்டேன்; ஒன்று இதோ என்னிடமுள்ளது' என்று சொல்லிக்கொண்டே மடியிலிருந்த ரத்னத்தை யெடுத்து அரசனது பாதத்திலே வைத்து ''மஹாப்ரபோ! என்னை மன்னிக்கவேணும், ஒன்றும் செய்யாமல் விட்டுவிடவேணும்'' என்று சொல்லிப் பாதங்களில் விழுந்துகிடக்கிறான். அரசன் அவனை அஞ்சேலென்று சொல்லித் தேற்றி நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு, தன் மடியிலிருந்த ஒரு ரத்னத்தை யெடுத்துக் கீழே வைத்திட்டு மந்திரியை நோக்கி ''இரண்டு ரத்னங்கள் இதோ வந்துவிட்டன; மூன்றாவது ரத்னத்திற்கு என்ன சொல்லுகிறாய்?' என்று கேட்க, அப்போதும் அவன் தன் களவை இசைந்துகொள்ளமாட்டாமல் ''இந்தக் கள்ளனேதான் அதையும் கவர்ந்தானென்று நான் ஸத்யம்பண்ணுவேன்'' என்றான்; உடனே அரசன் சிப்பாயை யழைத்து 'இவனது அரைத்துணியையும் சொக்காயை

யும் அவிழ்க்கச்செய்ய, அவன் ஒளித்துவைத்திருந்த ரத்னம் கீழே விழுந்தது. இனி மேல் கதையை வளர்த்தவேணுமோ? மந்திரிக்குக் கொடிய தண்டனை கிடைத்தது; ஸத்யவாதிக்கு மந்திரி பதவியும் அவனுடைய ஆசாரியர்க்குப் பாதி ராஜ்யமும் கிடைத்தது. ... ...

ஸத்யவாக்கின் பெருமை கண்டீர்களா ?

புதிய பதிப்புகளின் விளம்பரம்

ஸுந்தரபாஹுஸ்தவம்—விளக்க வுரை. மறு பதிப்பு ரூ. 5—00
ஸுதர்சனசதக வியாக்கியானம். மறு பதிப்பு 5—00
ஆளவந்தார் ஸ்தோத்ர வுரை, சதுச்ச்லோகி யுரை. ஜிதந்தா உரை 5—00
மூன்று வியாக்கியானங்களோடுகூடிய பகவத்விஷயம் (புதிய பதிப்பு) 120—00

விரிவான புதிய கியாடலாக் தருவித்துக் காண்க. 50 ரூபாய்க்கு மேற்பட்ட விலை யுள்ள புத்தகங்களுக்கு ஆர்டர்செய்யுமவர்கள் 25 ரூ. அட்வான்ஸனுப்பவேணும்.

கிடைக்குமிடம் :—

ஸ்ரீரங்கநாதா ஆபீஸ்,
காஞ்சீபுரம்—3.

பிங்கள வத்ஸர மங்களமாலிகை 3-ன் தொடர்ச்சி

முன்னிதழில் தொடங்கின *பூமன்னுமாது பொருந்தியமார்பன்* பாசுரத்தின் விவரணத் தொடர்ச்சி

[11, 12, 13, அடிபணிந்துய்ந்தவன் என்ற சொற்றொடர் முன்னிதழில் விவரிக்கப் பட்டது. இப்போது அந்த மூன்றுசொற்களும் தனித்தனியே விவரிக்கப்படுகின்றன.

11. அடி. திவ்யப்ரபந்தங்களில் திருவடியைப்பற்றி ஒரு விசேஷம் கேண்மின். பொய்கையாழ்வார்முதல் திருமங்கையாழ்வாரளவும் ஒவ்வோராழ்வரும் பிரபந்தம் தொடங்கும்போதோ முடிக்கும்போதோ (இரண்டிடத்திலுமோ) திருவடியைப் பேசுவதை விரதமாகக் கொண்டிருக்கின்றனர். இதை அடைவே விவரிக்கின்றேன். (பொய்கையாழ்வார்) *செய்யசுடராழியானடிக்கே* என்று தொடங்கினர். *ஓரடியும் சாடுதைத்த ஒண்மலர்ச்சேவடியும், ஈரடியுங் காணலாமென்னெஞ்சே! ஓரடியில் தாயவனைக் கேசவனை* என்று திருவடிமயமாகவே பேசித் தலைக்கட்டினர். (பூதத்தாழ்வார்) தம்முடைய திருவந்தாதியைத் தலைக்கட்டும் போது *அறைகழல சேவடியான் செங்கணெடியான்* என்றருளிச் செய்தார். (பேயாழ்வார்) இவர் தொடங்கும்போது *இன்றேகழக் கண்டேன்* என்றருளிச் செய்து, பிரபந்தம் தலைக்கட்டும்போதும் *சக்கரத்தான் தாள்முதலே நங்கட்குச் சார்வு* என்றருளிச் செய்தார். (திருமழிசையாழ்வார்) திருச்சந்த விருத்தம் தலைக்கட்டும்போது *உன்னபாதமென்ன நின்ற ஒண்சுடர்க்கொழுமலர்* என்றருளிச் செய்தார். (நம்மாழ்வார்) திருவிருத்தம் தொடங்கும்போது *அடியேன் செய்யும்

விண்ணப்பமே* என்று சொல்லி உடனே *தொழுநீரிணையடிக்கே அன்பு சூட்டிய* என்றருளிச்செய்தார். திருவிருத்தம் தலைக்கட்டுப்போது *அடிக்கண்ணி சூடிய மாறன்* என்றருளிச்செய்தார். அடுத்தபடி திருவாசிரியம் தொடங்குப்போது *மூவுலகளந்த சேவடியோயே* என்றார். பெரியதிருவந்தாதி தலைக்கட்டுப்போது *மொய்கழலே ஏத்த முயல்* என்றருளிச் செய்தார். திருவாய்மொழி தொடக்கம் *துயரறு சுடரடி தொழுதெழென்மனனே* என்பது. (குலசேகராழ்வார்) பெருமாள் திருமொழி தொடங்குப்போது *திரைக்கையால் அடிவருடப்பள்ளிகொள்ளுப்* என்றருளிச்செய்து, முடிவிலும் *நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே* என்றருளிச்செய்தார். (பெரியாழ்வார்) திருப்பல்லாண்டு தொடக்கம் *உன் சேவடி செவ்வி திருக்காப்பு* பெரியாழ்வார் திருமொழி தலைக்கட்டுப்போது *திருப்பொலிந்த சேவடி என் சென்னியின்மேல் பொறித்தாய்* என்றருளிச் செய்தார். (தொண்டரடிப்பொடிகள்) இவருடைய திருநாமமே அடிபட்டுக்கிடக்கிறது. (திருப்பாணாழ்வார்) *திருக்கமலபாதம்வந்து என் கண்ணினுள்ளனவொக்கின்றவே. *திருமங்கையாழ்வார்) இவ்வாழ்வார் வயலாலிமணவாளன் திருவடியில் வாய்வைத்தே பிரபந்தம் தொடங்கினர் என்றுணர்க. சரமப்பிரபந்தம் தலைக்கட்டும்போதும் *நெடியானே அடிநாயேன் நினைந்திட்டேனே* என்றார். (மதுரகவிகள்) ※முயல்கின்றேன் உன்றன் மொய்கழற்கு அன்பையே※. (ஆண்டாள்) ※உன்பொற்றுமரையடியே... கேளாய்※. திருமொழிமுடிவில் ※பெருந்தாளுடைய பிரானடிக்கீழ்ப் பிரியாதென்று மிருப்பாரே※ (இராமானுச நூற்றந்தாதி) மாறனடிபணிந்துய்ந்த—※இராமானுசனடிப் பூமன்னவே*.

நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் (6-10) ※உலகமுண்ட பெருவாயா பதிகத்தில் குறிக்கொள்ளத்தக்க விசேஷம் கேண்மின்; அப்பதிகத்தின் பதினெரு பாசுரங்களிலும் திருவடிப்ரயோகம் தவறுமலுள்ளது. 1. உனபாதம் கூடுமாறு. 2. உன்னடி சேர்வண்ணமருளாயே. 3. அண்ணலே! உன்னடி சேர. 4. பூவார் கழல்களருவினையேன். 5. திணரார்சார்ங்கத்தனபாதம். 6. உன்னடிக்களடியேன் மேவுவதே. 7. நொடியார் பொழுது முனபாதங்காண. 8. நோலாதாற்றேனுனபாதங்காண. 9 அந்தோவடியேனுனபாதம். 10. உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே. 11. அடிக்கீழமர்ந்துபுகுந்து. (இங்குமற்றொன்றும் குறிக்கொள்ளவேணும்.) இவ்வுலகமுண்டபதிகத்தில் பாசுரந்தோறும் திருவடிப் பேச்சுவருவது போல, (பாசுரந்தோறும்) அடியேன் என்பதும் வருவதுகாணலாம். நான்காவது பாட்டில் மட்டும் அடியேனுக்குப் பதிலாக 'அருவினையேன்' எனவந்துள்ளது.

12 பணிந்து. ※பணிந்துயர்ந்த பௌவப் படுதிரைகள்மோதப் டணிந்த பணமணிகளாலே அணிந்து. அங்கு அனந்தனணைக் கிடக்குமம்மான். அடியேன் மனந்தனணைக் கிடக்கும் வந்து※. இது மூன்றுந்திருவந்தாதியில் பதினேந்தாம் பாட்டு. கீழ்ப்பதினென்கம் பாட்டில் ''மாற்பால் மனஞ் சுழிப்ப மங்கையர் தோள் கை விட்டு நூற்பால் மனம் வைக்க நொய்விதாம்'' என்றருளிச் செய்த ஆழ்வாரை நோக்கி, சாஸ்த்ரங்களில் மனம் வைத்து அவ்வழியால் தான் எம்பெருமான்படிசீலை அறிபவேணுமென்றீரே; நீர் அவ்விதமாகத் தான் அறிந்தீரோ?' என்று சிலர்

கேட்க; எம்பெருமானுடைய நிர்ஹேதுகமான விஷயீகாரத்திற்கு இலக்கான்கள் சாஸ்த்ரங்களில் சிரமப்படவேணுமோ? அவன் தானே ஒருவரை விஷயீகரிக்கத் திருவுள்ளம்பற்றினால் எல்லை கடந்த அன்புகொண்டு அவன் செய்யும் காரியங்களைத் தடுப்பாருண்டோ?' திருப்பாற்கடலிலே பரமபோகமாகச் சண் வளர்ந்தருளும் மன் அதனை விட்டிட்டு என்னெஞ்சிலே வந்து கிடக்கிறானே; இது அவனுடைய நிர்ஹேதுக கிருபையினால் வந்ததன்றோ ? இங்ஙனமே அவன் நிர்ஹேதுகமாக விஷயீகரிக்க விரும்பப் பெறுமவர்களுக்கு யாதொரு சாஸ்த்ர பரிச்ரமமும் வேண்டா; நான் பெற்றபேறு அவர்களும் பெறுவர்கள் — என்ற கருத்தை யடக்கி இப் பாசுர மருளிச்செய்தபடி.

13. உய்ந்தவன். வடமொழியில், ஜீவநம் உஜ்ஜீவநம் என்று இரண்டு சொற்க ளுண்டு. வயிறு வளர்த்து வாழ்வது ஜீவனமென்றும், ஆத்மா கடைத்தேறப்பெறு வது உஜ்ஜீவனமென்றும் சொல்லப்படும். ஜீவனம் என்கிற சொல்லுக்கு இவ் விரண்டுபொருள்களையும் கொள்ளுவாருமுளரெனினும், உஜ்ஜீவனமென்கிற சொல் லுக்கு வயிறுவளர்த்து வாழ்தலைப் பொருளாகச் சொல்லுவாரில்லை. தமிழில் (உய்தல்) என்கிற சொல்லுக்கு ஜீவனமும் உஜ்ஜீவனமுமாகிய இரண்டும் பொரு ளாம். *திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்து உய்ம்மினே* என்றவிடத்து 'உஜ்ஜீவியுங்கோள்' என்று பொருள். *உய்ம்மின் திறைகொணர்ந்தென்றலகாண் டவர்* என்கிற அடுத்த பாசுரத்தில் 'ஜீவித்துப் போங்கோள்' எனறு பொருள்.

(தொடரும்)

தேவப்பெருமாள் வஸந்தோத்ஸவத்தில் சிறியதோர் அபாயம்

தேவப்பெருமாளுக்கு ஏழுநாளைய வஸந்தோத்ஸவம் 26-5-76 முதல் நடை பெற்றது. தினப்படி ஸாயங்காலம் 5-30க்குப் புறப்பாடு கண்டருளித் திருவடி ஸன்னிதியளவும் எழுந்தருளித் திருப்பியருள்வது வழக்கம். (31-5-76) ஆறுவது திருநாளன்று மாலை திருவடி ஸன்னிதியிலிருந்து திரும்பியெழுந்தருளுகையில் (கோபுரவாசலுக்குப் பத்திருபது கஜம் தூரத்தில் எழுந்தருளுகையில்) இயல் கோஷ்டியார் கோபுரத்தினுள் பிரவேசிக்கும் ஸமயம் கோபுரத்தின் மேலிருந்து (முதல் நிலையிலிருந்து) ஒருபகுதி பெருங்காற்றுக்கு இடிந்து இரண்டுவண்டிசெங்கற் கட்டிகள் கீழே விழுந்தன. இயல்கோஷ்டியின் பிந்தின வரிசைகளில் வந்துகொண் டிருந்தவர்களுடைய [ஏழெட்டு நபர்களினுடைய] உடலிலும் தலையிலும் பெரிய செங்கல்கள் விழுந்து பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. அப்போது இயல் கோஷ்டி யில் நாச்சியார் திருமொழிஸேவை நடக்கிறது. *நெஞ்சு துக்கம் செய்யப்பேர்ந் தாய் நின்றவிக்கன்னிபரோமை* என்னும் பாசுரம் ஸேவிக்கையில் இந்த ஸம்பவ மாயிற்று. பெருமாள் விரைந்து உள்ளே யெழுந்தருளி, வஸந்தோத்ஸவ மண்ட பத்திற்கு எழுந்தருளாமலே திருவபிஷேக மண்டபத்திற்கு எழுந்தருளி யாயிற்று, காயமடைந்தவர்கள் உள்ளூரிலும் சென்னையிலும் சிகித்ஸை பெற்றுத் தேறினர்.

ஸ்ரீ காஞ்சீ - வைசாகோத்ஸவ ஸமாப்தி

தேவப்பெருமாளுடைய வைகாசித் திருநாளைப்பற்றிச் சென்ற விதழில் தெரிவித்திருந்தபடியே உத்ஸவம் இனிது நடந்து முடிந்தது. திருத்தேருத்ஸவம் இரண்டு மூன்றுநாள் ஐந்தாறுநாள்கூட நடைபெறுவது வழக்கம். திருவோண நக்ஷத்திரத்தில் தீர்த்தவாரி (அவபிரதம) கண்டருள்வது அபூர்வமா யிருக்கும். அது வொரு விசேஷானந்தமாக இருக்கும். சென்றவாண்டிலும் இவ்வாண்டிலும் திருத்தேர் நிலையைவிட்டுக் கிளம்பாமல் யதாஸ்தானமே யிருந்தது. பெருமாள் அன்று பின்மாலை சுபமுஹூர்த்தத்தில் புறப்பட்டருளித் திருத்தேரிலமர்ந்து, பக்த வர்க்கங்களுக்கு அவ்விடத்திலேயே ஸேவைஸாதித்தருளி இரவு எட்டுமணிக்குமேல் கீழேயிறங்கியருளி அருகேயிருக்கும் தோட்டத்தில் மாமூல்படி திருமஞ்சனமும் ஆஸ்தான கோஷ்டியும் கண்டருளி அபர ராத்ரியில் ஸன்னிதி சேர்ந்தாயிற்று. இவ்வளவே திருத்தேருத்ஸவைபவம், திருத்தேர் வீதிகளில் ஓடாமைக்குக் காரணம் பேரருளாளன் திருவுள்ள முணரும்.

உத்ஸவார்த்தமாக மழைபெய்வதென்று ஒன்றுண்டு; அதற்கு ப்ரஸக்தியே யில்லையாயிற்று. இடையில் இரண்டொருவேளை சிறிது தூறல் கண்டதுண்டு. பொதுவாகச் சொல்லில், மஹோத்ஸவம் காலகாலத்தில் சிறப்புறவே நடைபெற்ற தென்லலாம். ... ...

ஸ்ரீ ராமானுஜன் சந்தாதாரர்களுக்கு
அவசியமான அறிவிப்பு.

பத்திரிகைஸம்பந்தமான அலுவல்கள் நடைபெறுவதற்குப் டணம் இன்றி யமையாதது. இதைப்பற்றி நாம் அடிக்கடி எழுதிக்கொண்டிருக்கவும் ஸங்கோசிக் கிறோம். கடைசியாகத் தெரிவிப்பதிதுவே. 1976 ஜனவரிமாதம் பிறந்த பின்பு சந்தாப்பணம் அனுப்பினவர்கள் இவ்வறிவிப்பைக் காணவேண்டாம். சில பல வருடங்களாக அனுப்பாதவர்களும், 1975ல் அனுப்பினவர்களும் நாளது 5—7—76க்குள் 25 ரூ. அனுப்பியாகவேண்டும். அவர்கள் மறுபடியும் பணமனுப்ப வேண்டியதில்லை. அன்னவர்கள் ஆயுள் சந்தாதாரர்களாகவே கருதப்படுவர்கள். இதைக் கவனிக்காதவர்களுக்கு அடுத்தமாதம்முதல் பத்திரிகை கிடைப்பது அரிதே யாம். ஜீவியச் சந்தா 100 ரூ. என்பதை மாற்றி 25 ரூ. மட்டும் என்றுக்கி யிருக்கி றோமென்பதைக் குறிக்கொள்ளவேணும். இதன்படி யனுப்பாதவர்களை பத்திரிகை வேண்டாதவர்களாக முடிவுசெய்வோம். இப்படிக்கு.

மானேஜர், க்ரந்தமாலா கார்யாலயம், காஞ்சீபுரம்—3.

அத்திகிரி யாருவாளர் தூது
(கலி விருத்தம்)

(ஸ்ரீ உவே. கா ப. வேங்கடக்ருஷ்ணய்யங்கார், Bolaram)

1 வேதியன்செய் வேள்வியினில் விரும்பியெதிர் வந்தான்
போதகப்பேர்ப் பொருப்பினையே பொருந்துமிடங் கொண்டான்

பாதகத்தைப் பார்தனிலே பாழ்செயவே வந்தான்
சீதளஞ்சேர் மலரடிகள் சென்னிமிசை வைப்பாப்.

2 அத்திகிரி யுச்சியினில் அனவரதம் நின்ரூன்
பத்துடைய வடியவர்கள் பதந்தொழவே யருள்வான்
வித்தகனும் கச்சிநப்பி வீடுறவே பார்த்தான்
நித்தமென துள்ளமிசை நின்றருளைப் பொழிவான்.

3 சக்கர முடன்சங்கும் தண்டுமொளிர் வாளும்
புக்கடையார் வலிதொலைக்கும் போர்வில்லு மேந்தி
மிக்கொளிரும் நீண்முடியான் மென்மலராள் மார்பின்
தக்கிருக்க நின்றருளும் தந்திகிரி மிசையே.

4 சிறைப்பறவை மீதேறித் திருவீதி வருவான்
கறைப்படியா நெஞ்சத்துக் கமலமலர் மேலோன்
சிறப்புடன்செய் வேள்வியினிற் றிகழ்வுறவே வந்தான்
அறப்பொருளை விளக்கிடுவான் அத்திகிரி நின்ரூன்.

5 தேசிகனும் எதிவரனும் தெளிந்துதொழு தேவன்
மாசுடையார் நெஞ்சத்தே மருவாத பாதன்
தேசுடைய தேவாதி தேவனவன் விண்ணோர்
ஆசையுடன் தொழநின்ரூன் அத்திகிரி மீதே.

6 பெருந்தேவி மணவாளன் பேராரும் அனந்த
சரசென்னுந் தடத்தாளன் தாமரைபோற் கண்ணன்
கருத்தள்ளும் வினையெல்லாங் கருக்காளன் வேதன்
அருச்சிக்கும் திருத்தாளன் அத்திகிரி யானே.

7 வேகவதி யாற்றருகே விளங்குமொரு குன்றம்
மாகமுற வளர்ந்தோங்கும் மதயானைக் குன்றம்
போகபதி யெனவிளங்கும் புகழ்க்காஞ்சி நகரில்
சோகமறத் தொழுதெழுவோம் தூயவனே வாரீர்.

8 அறம்வளர்க்கும் நாயகியும் ஆம்பிரக்கீ ழோனும்
திறம்மிகுத்த தேவர்களுந் தினந்தோறும் சேர்ந்தே
மறையுரைத்துப் போற்றவருள் மதயானைக் குன்ரூன்
பிறப்பறுப்பான் பணிவோர்க்குப் பெருந்தகையோன் காண்மின்.

9 சேவைசெயுஞ் சீர்மையினைத் திருவாகிக் காட்டும்
பூவையெலா மாக்கிடவே பூவோனைத் தோற்றும்
சாவுதர உயிர்ப்பிரித்தே சங்கரனைக் காணும்
மேவுமொரு மதயானை மலைமிசையாம் வேந்தே.

10 அடியார்கள் தொழுதேத்த ஆவலுட னேற்கும்
முடியாத பிறவிக்கோர் முடிவிடமா நிற்கும்
கடல்சூழும் உலகத்தே கமலத்தோன் வேள்வி
அடியாக வானைமலை யன்றுவருங் கோவே.

11 மன்னுதமிழ் முன்சென்றே வழிகாட்டப் பின்னர்ப்
பன்னுவட மொழிதொடரப் பாங்குடனே நடுவண்
துன்றுமடி யார்மருவத் தொல்வீதி வருவான்
தொன்மையுறு மத்திகிரித் தூயனவன் முனே.

இதனின் மிக்கோர் வியப்புண்டோ!

ஸ்ரீ காஞ்சி வரதராஜஸ்வாமியின் வையங்கண்ட வைகாசிமகோத்ஸவத்தில் ஆங்காங்கு பற்பல விநோதங்களை மக்கள் காண்பதுண்டு. நவீன சர்க்கஸ், புதிய கண்காட்சி, என்றென்று சில நிகழும். ஓரிடத்தில் ஓட்டிக்கொண்டிருக்கும் இரட்டைக்குழந்தை; மற்றோரிடத்தில் ஒரேதலையுடன் இரண்டு உடல் கொண்ட ஒரு பசு என்றுப்போலவும் சில விநோதங்களைக் காணலாம். இவற்றுக் கெல்லாம் மேலாக ஒரு விநோத ஹாஸ்ய ஸம்பவத்தை ஸ்ரீகாஞ்சி வரதன் கருடோத்ஸவத் தன்று சிலர், விலாவெலும்பு குலுங்கக்குலுங்க சிரித்தனுபவிக் கும்படி நேர்ந்தது. இது கற்பனை நாடகமன்று. உண்மையாக நடந்த ஸம்பவமே. Truth is stranger than fiction என்பர்கள், அதாவது, சில உண்மை நிகழ்ச்சிகள் கற்பனைக்கும் எட்டாதபடி விநோதமாயிருக்கும் என்றபடி. இதற்கு ஒரு எடுத்துக்காட்டு கீழ் விவரிக்கப்படும் ஸம்பவம். நடந்ததை, நேர்முகவர்ணனை [Running commentary] ரீதியில் அறிவிக்கலாகிறது.

நாடக பாத்திரங்கள்

1. ஒரு பேராசிரியர் [சமீபத்தில் ஒரு "பெரிய கோயிலை"ப் பற்றிச் சிறந்த ஆராய்ச்சிநூலைப், பல பெரியோர்களும் பத்திரிகைகளும் மிகமிக மெச்சும்படி எழுதி வெளியிட்டவர்].

2. ஒரு வயோதிகர் [ஆன்மிகத்துறை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்].

ஒரு அன்னியர் [இவர், தம் தேசத்தின் மாட மாளிகை கூடகோபுரங்களைத் துறந்து, தம்மவரின் நவீன உயர்தர டாம்பீக வாழ்க்கையையும் வெறுத்து, நம் பாரதநாட்டின் பூர்விகக் கலையையும் உன்னத பண்பையும் விரும்பி, ஆங்காங்குள்ள புனிதஸ்தலங்களையும் பெரியோர்களையும் நாடி ஆன்மிக உண்மைகளை யறிவதில் நோக்க முடையவர், மேற்சொன்ன வயோதிகரிடம் சில நாட்களாக வைணவத்தைப்பற்றிய உண்மைகளையறிய வந்துகொண்டிருப்பவர்.]

ஒரு என்ஜினியர். [காஞ்சியில் மேற் சொன்ன அன்னியருக்கு உதவிபுரிபவர்; இவரும் ஆன்மிக உண்மைகளையறிவதில் நோக்கமுடையவர்.]

ஒரு பண்ணையாளர் [இவரும் மேற் சொன்னவரைப் போன்றவரே.]

6. சென்னையிலுள்ள ஒரு சிறந்த அட்வகேட்

7. ஒரு நவீனர் [சென்னையிலுள்ள ஒரு நவீன சமயநூல் வெளியீடு சபை காரிய தரிசி என்று பிறகு ஏற்பட்டது]

இன்னும் மேற் சொன்ன வயோதிகரின் வீட்டிற்கு கருடோத்ஸவத்திற்காக வந்திருக்கும் விருந்தாளிகள், மற்றும் பலர், சிறுவர்கள்; மொத்தத்தில் இருபது பேருக்கு மேலிருக்கும்.

இடம்: மேற் சொன்ன வயோதிகரின் வீட்டு நடுக் கூடம்.

நேரம்: காலை 8 முதல் 9 மணி வரையில்

பேராசிரியர்: [வயோதிகரிடம்] "என் லெட்டர் நேற்று கிடைத்திருக்குமே."

வயோதிகர்: ஆம் கிடைத்தது: நான் மறுபடியும் உங்கள் புத்தகத்தை நன்றாகப் பார்த்தேன், அதில் ஒன்றும் தவறாக எழுதியிருக்க வில்லையே!

பேராசிரியர்: நான் ஒருவருடைய மனதையும் புண்படுத்தும் இயல் புடையவனல்லேன் என்பது எல்லாருக்கும் தெரியும். என்னையுமறியாமல் சிலதவறுகள் விழுந்திருக்குமோ வென்று சந்தேகித்துதான் உங்களுக்கு எழுதினேன்.

வயோதிகர்: ஒரு தவறுமில்லை. 'உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு'——என்பார்களே! இந்த ரீதியில் சிலருக்கு மனம் நொந்தால் நாம் என்ன செய்ய முடியும். யதார்த்த வாதீ பஹுஜனத்வெஷீ என்று நம் ஸ்வாமி கூட அடிக்கடி அருளிச் செய்வரே. இவ்விஷயத்தில் உண்மையைத் தெரிவிக்கும் சில பழைய புத்தகங்களை இதோ எடுத்து வைத்திருக்கிறேன். அடையாளம் வைத்திருக்கும் பக்கங்களை மறுபடியும் நாம் பார்ப்போம். சந்தேகமே கிடையாது. அந்த மடம் ஆதியிலிருந்தது ஒரு விதம் தான்; இப்போதிருப்பது வேறொரு விதம் தான், இதை நிரூபிக்கச்சில கோர்ட்டு ரிகார்டுகளும் உள்ளன.

இந்த சமயத்தில் மேற் சொன்ன அன்னியரும் அவரது நண்பர்களும் உள்ளே நுழைகிறார்கள்.

வயோதிகர்: Hello! Good Morning—Welcome at the right time. This is Mr.— — — Dr.— — — whose recent excellent book, I showed you yesterday [வருக! வருக! நல்லதருணம். இவர்தான் நேற்று நான் காட்டிய அற்புத நூலை எழுதியவர் டாக்டர்———.

அன்னியர். Good Morning—(பேராசிரியரைப் பார்த்துக் கொண்டே, புன்முறுவலுடன்) 'உங்களை இங்குச் சந்திக்க நாங்கள் கொடுத்து வைத்தோம்! தெய்வம் எங்களை நல்ல வழியில் தான் நடத்துகிறது. உண்மையில் உங்கள் புத்தகம் மிக அற்புத மானதே.....',

இந்த சம்பாஷணை முடிவதற்குள் திடீரென்று ஒருபுதுமுகம் கூட்டத்தை விலக்கிக் கொண்டே உள்ளே நுழைகிறது. வீட்டுக்காரரிடம் மரியாதைச்சுக் கூட ஒரு அனுமதியைக் கோரவில்லை. அவர்மேல் உராய்ந்து கொண்டேபெஞ்சியில் உட்காருகிறது. வயோதிகருக்குமுன் இரண்டடி தூரத்தில் ஒரு தனி நாற்காலியில் அன்னியர் அமர்ந்திருக்கிறார். அவர் அருகிலேயே மற்றொரு நாற்காலியில், பேராசிரியர் வீட்டுக்காரரைப் பார்த்தாற்போல் அமர்த்திருக்கிறார் – அன்னியரின் மற்றொரு பக்கத்தில் ஒரு நாற்காலியில் சென்னை அட்வகேட் அமர்ந்திருக்கிறார். இவர்களைச் சுற்றி மற்றவர் நின்று கொண்டிருக்கிறார்கள். கூடத்தில் வெளிச்சத்திற்குக் குறைவேயில்லை. நவீனர் ஒரு பெரிய பையிலிருந்து சில புத்தகங்களை யெடுத்து ஒவ்வொன்றாக அன்னியரிடம் காட்டுகிறார். கடைசியில், மேல் பிரஸ்தாவித்த பேராசிரியரின் சமீப வெளியீட்டையே (ஒரு ப்ரதியைத் தம் முடைய பையிலிருந்து எடுத்து) அன்னியரிடம் கொடுத்துக்கொண்டே கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''இது சமீபகாலத்தில் வெளிவந்த ஒரு அற்புதமான ஆராய்ச்சி நூல்: இதைப் பல பெரியோர்கள் கொண்டாடியுள்ளனர்: ஏறக்குறைய எல்லா பத்திரிகைகளும் இதை மிகமிகப் புகழ்ந்து விமர்சனம் செய்திருக்கின்றன. இதன் ஆசிரியர் எனக்கு நன்குத் தெரியும்! பத்தெட்டு வருஷங்களாக நெருங்கிய பழக்கம். இதிலுள்ளவை பெரும்பாலும் என்னுடைய சரக்கே. தொண்ணூறுபங்கு என்று கூட சொல்லலாம். பத்து பங்குதான் அவருடையதாக விருக்கும்! அந்த பத்து பங்கும் அபத்தம். (கூடத்திலுள்ளவர்கள் ஒருவர்முகத்தை யொருவர் பார்த்து திகைக்கிறார்கள்.) ஆசிரியரின் சொந்த மதத்வேஷத்தை அதில் காட்டியிருக்கிறார். அவருடைய துர்க்குணங்கள் எனக்கு நன்றாகத் தெரியும்.....''. (மறுபடியும் கூட்டத்தில் திகைப்பு.)

வயோதிகர்: (நவீனரை நோக்கி) Sir, உங்கள் பேச்சைக் கொஞ்சம் நிறுத்துங்கள். இதன் நூலாசிரியர் உங்களுக்கு எவ்வளவு காலமாகத் தெரியும் என்கிறீர்கள்?

நவீனர்: ''பத்தெட்டு வருஷங்களாக நன்றாகத் தெரியும் என்றுதான் ஏற்கனவே சொன்னேனே! அவரும் சிலதடவை என் வீட்டிற்கு வந்திருக்கிறார். அவர் வீட்டிற்கு நானும் பலதடவை போய் பல விஷயங்களை விளக்கியிருக்கிறேன் ஆகையால்தான் அவருடைய மர்மங்களெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும் என்றேன். (மறுபடியும் கூட்டத்திலுள்ளவர் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு திகைக்கிறார்கள்.)

வயோதிகர்: (நவீனரைப் பார்த்து) இதன் ஆசிரியர் இப்போது எங்கிருக்கிறார் என்று சொல்லுவீரா?

நவீனர்: ஏன் இந்த கேள்வி! அவர் இப்போது சென்னையில்தான் இருக்கிறார். (கூட்டத்தில் சலசலப்பு, சிரிப்பு.)

வயோதிகர்: உங்களுக்கு அவர் அடியோடு தெரியாது என்கிறேன்.

நவீனர்: Nonsense! கூட வாருங்கள், சென்னைக்கு அழைத்துச் சென்று நான் சொன்னதை நிரூபிக்கிறேன்.

[மறுபடியும் கூட்டத்தில் ஒரே திகைப்பு; பரபரப்பு; ஒரே சிரிப்பு; சிறுவர்களின் கைக்கொட்டு; நவீனர் முகத்தையும் பேராசிரியர் முகத்தையும் மாறிமாறிப் பார்க்கிறார்கள்].

பேராசிரியர்: எல்லோரையும் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். சற்று சப்தம் போடாமல் இருக்கும்படி. (நவீனரைப்பார்த்து) ''இப்புத்தகத்தில் தொண்ணூறு பங்கு உங்களுடைய சரக்கு என்றும் பத்து பங்குதான் ஆசிரியருடையது என்றும் சொல்கிறீர். அந்த பத்து பங்கும் அபத்தம் என்கிறீர். எப்படி என்று சற்று நிரூபிப்பீர்களா? ஓரிரண்டிடம் காட்டினால் போதும்!

நவீனர்: ஆம்! உண்மைதான். எனக்குக் கிடைக்கவேண்டிய டாக்டர் பட்டத்தை அந்தப் பையல் தட்டிக்கொண்டு போய்விட்டான். (மறுபடியும் கூட்டத்தில் ஒரே சலசலப்பு. சிறுவர்களின் சிரிப்பை யடக்கவே முடியவில்லை.)

வயோதிகர். (நவீனரை நோக்கி) ''அதிகமாக ஓடாதீர். சற்று நிதானித்து கவனித்து பேசும். (பேராசிரியரைச் சுட்டிக் காட்டி) இவர் கேட்டதற்கு பதில்

சொல்லும். சவாலை ஏற்றுக்கொள்கிறீரா ? இல்லையா ? புத்தி ஸ்வாதீனத்துடன் தானே இருக்கிறீர் !"

நவீனர்: (பேராசிரியரின் முகத்தை உற்று நோக்கிக்கொண்டே] "இப்புத்தக வாசிரியருக்குப் பரிகிறீரே ! உமக்கு அவர் வேண்டியவரா ?" யாராஞலென்ன ? தப்பு தப்புதானே! (மறுபடியும் கூட்டத்தில் ஒரே சலசலப்பு; சிரிப்பும் கைக்கொட்டலும் அதிகரிக்கிறது. அன்னியர், கைக்குட்டையால் தன் சிரிப்பை மறைக்க முயலுகிறார்)

வயோதிகர்: (நவீனரைப் பார்த்து) "உமக்கு இதன் ஆசிரியர் நன்றாகத்தெரியுமென்கிறீரே, அவர் வீட்டிற்கும் அடிக்கடி போய் நெருங்கியும் பழகியிருக்கிறீர் என்கிறீரே; அவருடைய நண்பர்களும் உறவினர்களும் உமக்குத் தெரிந்திருப்பர்களே! நன்றாகப் பாரும்! (பார்வையில் குறைவில்லையே) இவர் அவருடைய நண்பரா; பந்துவா; அல்லது சகோதரரா யிருக்கலாமா...அல்லது.. இவர்...அவரேதானா...நன்றாகப் பாரும்' (கூட்டத்தில் ஒரே சிரிப்பு, சிறுவர்களின் கைக்கொட்டல்களை அடக்கவே முடியவில்லை).

நவீனர்: Nonsense, எல்லோரும் சேர்ந்து என்னைப் பைத்தியக்காரனாக்கப் பார்க்கிறீர்களே; அவன் ஏன் இங்கு வரப்போகிறான்! (மறுபடியும் கைக்கொட்டலும் கூச்சலும் அதிகரிக்கிறது.) சென்னை அட்வகேட் நவீனருக்கு, முகக்குறிப்பினால் உண்மையைத் தெரிவிக்கிறார். உடனே நவீனர் சடக்கென்று எழுந்து புத்தகங்களை எடுத்து தம் பையில் போட்டுக்கொண்டு நழுவப்பார்க்கிறார்!

வயோதிகர்; (நவீனரைப் பார்த்து) "சற்று நில்லும். வரும்போதுதான் மரியாதைக்குக்கூட அனுமதி பெறுமல் வந்தீர். போகும்போதாவது விடைபெற்றுப் போகக்கூடாதா! So, May I take you as a true representative of your new cult.....engaged in nothing but false propaganda-denying truth and affirming untruth.....and refusing to see the truth even if lit large before your very eyes! (ஆகையால் உம்மை, சென்னையில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள உங்களது நவீன சபையின் உண்மைப் பிரதிநிதி என்று கொள்ளலாமா? உண்மையைப் பொய் என்பதும், பொய்யை உண்மை யென்பதும், முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்கப்பார்ப்பதும், பிறர் குணங்களை நீங்கள் அபகரிப்பதும், உங்களுடைய தோஷங்களைப் பிறர்மேல் ஏற்றுவதும், ஆயிரம் கேண்டல் பல்பு போட்டு உண்மையை கண்ணெதிரில் நிற்கவைத்தாலும் அதைப்பார்த்து ஒப்புக்கொள்ள மறுப்பதும், இவை போன்றவைதானே உம்முடைய சபையின் நோக்கம்? (இந்த கேள்விக்குப் பதில் வரவில்லை. கூட்டத்திலிருந்து எப்படி, எந்த திக்காக நவீனர் நழுவினார் என்று ஒருவராலும் சொல்ல முடியவில்லை.

அன்னியர்: So, we have had a very good example here as to, to what extent fanaticism can drive one mad! (மதவெறியானது ஒருவனை எவ்வளவு தூரம் பைத்தியமாக்கி திரியவைக்குமென்பதற்குச் சரியான திருஷ்டாந்தம் இங்கு நமக்குக் கிடைத்தது.)

காளிதாஸன், ஷேக்ஸ்பியர் போன்றவர்களுடைய கற்பனைக்கு மெட்டாத விஞ்ஞான உண்மை நிகழ்ச்சியொன்றை கண்டனுபவித்தோமல்லவா !

—பாலாஜீ.

சுபமஸ்து.



சென்னைமாநகரில் ஸத்காலக்ஷேப சபையின் ஸெக்ரிடெரியும்
சிறந்த ஆஸ்திகரும் ஸ்ரீ வைஷ்ணவ சிரோமணியும்
அனேக தார்மிக கார்யப்ரவர்த்தகருமான

ஸ்ரீமான் A. V. கன்னைய நாயுரு அவர்களின்

செல்வப்புதல்வனை

வாசுதேவ நாயுடுவின்

திருமணக்கரட்சி.

விசயதசமி

[ஸ்ரீ ராமாநுஜமிஷன் கௌரவ பொதுச்செயலாளர் ஸ்ரீ உ. வே. P.B K. ஸ்ரீனிவாஸாசாரியர்]

ஸ்ரீ ராமாநுஜரின் 960-வது வருஷபூர்த்தி மஹோத்ஸவம் அதாவது 16-வது ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவம் பிங்களஹூ சித்திரைமீ திருவாதிரைநாளன்று நடைபெற்விருக்கிறது அதன் வைபவமாக நளஹூ சித்திரை திருவாதிரை முதல் ஒருவருஷம் ஸ்ரீ ராமாநுஜர் வைபவபரமாகவே உபன்யாஸம் நடைபெறச் செய்யவேண்டும் என்ற உத்தேசத்தினல் ஸ்ரீ ராமாநுஜமிஷன் ஸ்ரீரங்கம் கிளையின் சார்பில் ஸ்ரீரங்கம் வடக்கு உத்தர வீதியில் உள்ள ஸ்ரீரங்க நாராயண ஜீயர் மடத்தில் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமி தலைமையில் 31—5—76 வைகாசி திருவாதிரைநாளன்று உபன்யாச விழா ஆரம்பமாயிற்று. ஸ்ரீ உ. வே. வித்வான் சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ உ. வே. வித்வான் ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சநம் ஆசிரியர் S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும் ஸ்ரீ ராமாநுஜர் வைபவபரமாய் இந்த தொடர் உபன்யாஸம் நடைபெறவேண்டிய தின் முக்கியத்தையும், நடைபெறவிருக்கும் முறைகளைப் பற்றியும் உபன்யஸித் தனர். 3—6—76 அன்று ஸ்ரீ உ. வே. வித்வான் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீனி வாஸாசாரியார் ஸ்வாமி "ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்வஸித்தாந்தம் என் பது பற்றி உபன்யஸித்தார். மேல் 13—6—76 ஞாயிறன்று ஸ்ரீ உ.வே. வித்வான் R. நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமி "ஸ்ரீபாஷ்யத்தில் அந்தரதிகரணம் பகவான் தாமரைக் கண்ணினன்" என்பதுபற்றி உபன்யஸிப்பார். ஸ்ரீபாஷியம் வேதாந்த ஸாரம், வேதாந்த தீபம் இவற்றில் 10 உபன்யாஸம், ஸ்ரீ கீதாபாஷ்யத்தில் 10 உபன்யாஸம், ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம் கத்யத்ரயம், நித்யம் இவற்றில் 10 உபன்யாஸம். பகவத் விஷயத்தில் ஸ்ரீ ராமாநுஜர் நிர்வாஹபரமாய் 10 உபன் யாஸம் ஆக 50 உபன்யாஸம் பல மஹனீயர்களைக்கொண்டு நடைபெறச்செய்ய ஏற்பாடாகி உள்ளது.

———

கடிதம்—2

துக்ளக் என்கிற பத்ரிகையின் 15—4—76 வெளிவந்த இதழில் P. B. A. ஸ்வாமியைபற்றிச் சில 7, 8, வரிகள் எழுதப்பட்டுள்ளன:— "சொந்தமாகப் பல நூல்களை எழுதி, பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெற்றிகரமாகச் செய்து கொண்டுவரும் சிலரில் காஞ்சீபுரப் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரி யார் சுவாமிகளை முக்கியமாகக் குறிப்பிடலாம். இப்பொழுது அவரது வயோதிக நிலையிலும்கூட, ஆண்டுதோறும் அவர நூல்களை வெளியிடத்தவறுவதில்லை" என்று.

P B. A. சுவாமிகள் ஆண்டுதோறும் எழுதியருள்வதுதான் அப்பத்திரிகை யாசிரியர்க்குத் தெரிந்தது போலும். மாதந்தோறும் (ஏன்?) நாள்தோறும் நாழிகைதோறும் எழுதி வருவதும் அச்சிட்டு வருவதும் அவர்களுக்குத் தெரிய வில்லை போலும். இதை ஸ்ரீராமாநுஜன் மூலமாக அவர்களுக்கு உணர்த்துப்படி கேட்டுக்கொள்ளுகிறேன். M. A. வேங்கடகிருஷ்ணன், சென்னை-5.

[பத்திராதிபருடைய பதில்;— துக்ளக் என்றொரு பத்ரிகை வெளிவருவதே நமக்குத் தெரியாது. அந்தப்பெயருக்கு என்ன பொருளென்பதும் தெரியாது. அவர்கள் தமக்குத் தெரிந்தவளவு எழுதியிருப்பதில் தவறும் தோன்றவில்லை.]